**சுருக்கம்**

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடிநீர்வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டத்தினை ரூ. 550 கோடியில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2008–2009ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையினால் திருச்சி மாவட்டம், முசிறி சாலையில் அய்யாற்றின் குறுக்கே எல். எஸ். 1000 மீ மற்றும் எல். எஸ். 1250 மீ கீழ்புரம் கிளியானூர் பட்டி கிராமத்தில் எல்.எஸ். 2500 மீட்டரில் தடுப்பணை அமைக்கும் திட்டம் ரூ. 1,27,40,000/– – ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(ஆர்.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.245 நாள் 5.8. 2008
ஆடி 21,
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க

அரசாணை(நிலை) எண். 198, பொதுப்பணி(ஆர்.2)த்துறை, நாள் 10.6.2008.

மீண்டும் படிக்க

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை கடித எண். எப்.1/3000/2008, நாள் 5.6.2008.

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்டப் பேரவையில் 23.1.2008 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டில் நீர் பற்றாக்குறை பகுதிகளில் வரும் நிதியாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீர் ஓடைகளில் பயன்படுத்தப்படாமல் போகும் நீரினை தடுப்பணைகள் கட்டி சேமித்து அதனை ஆண்டு முழுவதும் அப்பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் வேளாண்மை ஆகியவற்றிற்கு பயன்படுத்துவதற்கான பெரும் திட்டம் (Master Plan) செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் 2008–09ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் இத்திட்டம் இந்த நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர்( பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில், மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும்திட்டத்தினை (Master Plan) ரூ. 550.00 கோடி மதிப்பீட்டில் நிலத்தடி நீர் தொடர்புடைய துறைகள் செயல்படுத்த, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன. 2008–09ம் நிதியாண்டில் பணிகளை மேற்கொள்ள நீர்வள ஆதாரத் துறைக்கு ரூ. 48.00 கோடி, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்திற்கு ரூ. 2.00 கோடி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 24.00 கோடி, வேளாண் பொறியியல் துறைக்கு ரூ. 25.00 கோடி, வனத்துறைக்கு ரூ. 1.00 கோடியும் ஆக மொத்தம் ரூ. 100.00 கோடி நிதியொதுக்கமும் செய்யப்பட்டது. ரூபாய் 1.00 கோடிக்கு மேற்பட்ட ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான விரிவான திட்ட மதிப்பீட்டினையும், ரூ. 1.00 கோடிக்கு உட்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை ஒரே தொகுப்பாகவும் பெற்று நிதித் துறையின் இசைவோடு சம்பந்தப்பட்ட துறைகள் நிருவாக ஒப்புதல் வழங்கிடவும் ஆணையிடப்பட்டது.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) தமது கடிதத்தில் 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையினால் திருச்சி மாவட்டம், முசிறி சாலையில் அய்யாற்றின் குறுக்கே எல். எஸ். 1000 மீ மற்றும் எல். எஸ். 1250 மீ கீழ்புறம் கிளியானூர் பட்டி கிராமத்தில் எல்.எஸ். 2500 மீட்டரில் தடுப்பணைகள் அமைக்கும் திட்டத்தினை ரூ. 1,27,40,000/– மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு மதிப்பீட்டினை (2008–09ம் ஆண்டிற்கான விலை விகிதப் படி) அனுப்பியுள்ளதோடு, இதற்கு அரசின் ஒப்புதலை பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்) அவர்களது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து,, மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும் திட்டத்தின் கீழ், 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையினால் திருச்சி மாவட்டம், முசிறி சாலையில் அய்யாற்றின் குறுக்கே எல். எஸ். 1000 மீ மற்றும் எல். எஸ். 1250 மீ கீழ்புறம், கிளியானூர் பட்டி கிராமத்தில் எல்.எஸ். 2500 மீட்டரில் தடுப்பணை அமைக்கும் திட்டத்தினை ரூ. 1,27,40,000/– மதிப்பீட்டில் (ரூபாய் ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) செயல்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: -

"4702–00. சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 102. நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II. மாநிலத்திட்டம் – JC. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு திட்டம்–16.பெரும்பணிகள் (த.தொ.கு.4702–00–102–JC–1601)"

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினமான ரூ. 127.40 இலட்சங்களை பெற்று வழங்க முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (மற்றும்) தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை – 5 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலும், எதிர்பாரா செலவினங்கள் (Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள் (Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள்(Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான

செலவினத்தில் 2.5%க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 40296/பொ.ப.II/2008 நாள் 23.7.2008ல் பெறப்பட்ட இசைவோடு வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

எஸ். ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை—5
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சேப்பாக்கம், சென்னை—5
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்),
தரமணி, சென்னை —113.
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி
மாநில கணக்காயர், சென்னை—18/ பெயரில்
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை — 5
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, செ—25
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை—9
பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை — 9
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை—5
தலைமைப் பொறியாளர்(வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை—35
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர்,வனத்துறை , சென்னை—6
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்) சென்னை—9
நகல்
நிதித்துறை (பொ.ப.II) /வேளாண்மை/சுற்றுச் சூழல்/ நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை —9
இ.கோ/உ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்